# வாக்குமூலம்
# தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.
# வழக்கு எண் : SC.No.90/2017
# வழக்கு சாட்சி PW – 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜேம்ஸ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 15th, 2024.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை –**

நான் வல்லத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் காவல் நிலையம் சென்றிருந்தபோது, போலீசார் என்னிடம் இந்த கையெழுத்தை வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது. அந்த கையொப்பம் அ.சா.ஆ.5. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி  கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 12.10.2015ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த ஜோசப் என்பவரும் எங்கள் ஊர் ஜெயபால் வீட்டிற்கு வந்தபோது, அங்கு வந்த போலீசார் சம்பவயிடத்தையும், சுற்றுப்புறத்தையும் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்து விட்டு,  தற்போது எதிரியை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.90/2017</u>**

**<u>வழக்கு சாட்சி PW – 8</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோக் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 15th, 2024.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 2ம் எதிரி தரப்பில் கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது முப்புலியூரில் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் வல்லம். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி குமார் என்ற பசுபதி குமாரை எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு நான் செங்கோட்டை காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது, என்னிடம் எழுதாத வெள்ளைப் பேப்பரில் போலீசார் கையெழுத்து மட்டும் வாங்கிக் கொண்டார்கள். எதற்காக கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.6. அத்தாட்சியிலுள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.7. இந்த வழக்கு

சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் பகுதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 12.10.2015ம் தேதி நானும், எங்கள் ஊரைச் சேர்ந்த பண்டிட் மோதிலால் என்பவரும், வல்லம் சிலுவை முக்கு பக்கம் நின்றிருந்தபோது, அங்கு வந்த ஆஜர் எதிரி குமார் என்ற பசுபதியை செங்கோட்டை போலீசார் எங்கள் முன்னிலையில் கைது செய்தார்கள் என்றும், அப்போது எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவத்திற்கு பயன்படுத்திய மறைத்து வைத்திருந்த அரிவாள் மற்றும் வாளை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், அதை போலீசார் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்து விட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> –

இல்லை.

(ஒம்)/–C.கதிரவன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
தென்காசி.